ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

**வெளியிடுபவர்** கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்

**திகதி** 2019.06.24

## இலங்கை அதன் தேசிய அட்டைத் திட்டத்தினை ஆரம்பித்திருக்கிறது

இலங்கை மத்திய வங்கி லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட்டுடன் இணைந்து தேசிய அட்டைத் திட்டத்தினை ஆரம்பித்ததன் மூலம் நாட்டின் கொடுப்பனவுத் தோற்றப்பாட்டில் குறிப்பிடத்தக்க மைல் கல்லொன்றினை அடைந்திருக்கிறது. தேசிய அட்டைத் திட்டமானது, பன்னாட்டு கொடுப்பனவு அட்டைத் தொழிற்பாட்டாளரான ஜேசிபி யப்பான் இன்ரநைஷனலின் பங்கேற்புடன் லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் தொழிற்படுத்தப்படும். ஆரம்பத்தில், இவ்வட்டைத் திட்டத்தின் கீழ் பற்று அட்டை வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக, காசு மீள பெறுகைகளுக்கு வசதியளிப்பதற்காக, லங்காபே வலையமைப்புடன் நாடளாவிய ரீதியில் இணைக்கப்பட்டுள்ள 4,800 இற்கு மேற்பட்ட தன்னியக்கக்கூற்றுப் பொறிகளில் தேசிய அட்டைத் திட்ட அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

எம்சிபி வங்கியினால் வெளியிடப்பட்ட முதலாவது லங்காபே - ஜேசிபி கூட்டு அடையாளத்தினைக் கொண்ட பற்று அட்டையானது விற்பனைகளின் பொதுவான மைய ஆளியின் வங்கிகளான கார்கில்ஸ் வங்கி மற்றும் இலங்கை வர்த்தக வங்கி என்பனவற்றினால் கையேற்கப்பட்டமையின் மூலம் நடைமுறைக்கு வந்தது. செலான் வங்கியும் வர்த்தகமல்லா அடிப்படையில் விற்பனைகளின் பொதுவான மையத்தில் இணைந்துகொண்டது. லங்காபே - ஜேசிபி கூட்டு அடையாளத்தினைக் கொண்ட பற்று அட்டைகள் வழங்கப்பட்டுள்ள எம்சிபி வங்கியின் வாடிக்கையாளர்கள் இவ்வங்கிகளினால் தொழிற்படுத்தப்படுகின்ற அனைத்து விற்பனை மைய முனைக்கோடிகளிலும் இவ்வட்டையினை தற்போது பயன்படுத்திக் கொள்ளலாம்.

நாட்டின் கொடுப்பனவு உட்கட்டமைப்பிற்கு மிகப்பெரும் சுயாதீனத்தினைக் கொண்டுவருவதையும் உள்நாட்டு நாணயக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது பணிக் கட்டணமாக தற்பொழுது வெளிச்செல்லும் வெளிநாட்டுச் செலாவணியினைக் குறைப்பதனையும் நோக்கமாகக் கொண்டு இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரையின் கீழ் தேசிய அட்டைத் திட்டம் 2017இல் லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட்டினால் ஆரம்பிக்கப்பட்டது. நிதியியல் உள்ளீட்டினை இயலுமைப்படுத்துவது தேசிய அட்டைத் திட்டத்தின் பிரதான குறிக்கோள்களில் ஒன்றாகும். தேசிய அட்டைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் வாடிக்கையாளர்களுக்கு குறைந்த செலவில் அட்டைகளை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுத் தீர்வுகளை வழங்கக்கூடியனவாக இருக்கும். இதன்படி, நாட்டிலுள்ள காசினை அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல்வாங்கல்களின் பெரும் எண்ணிக்கைக்கு வகைகூறும் சந்தையின் பின்தங்கிய பிரிவினருக்கு பெருமளவு வசதிகளை வழங்குகின்ற நிதியியல் நிறுவனங்களின் வாடிக்கையாளர்கள் தேசிய அட்டைத் திட்டத்தினால் வழங்கப்படுகின்ற அட்டையினை அடிப்படையாகக்

கொண்ட தீர்வுகளிலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதன் மூலம் கொடுப்பனவுத் தொழில்நுட்ப முன்னேற்றங்களின் நன்மைகளை அனுபவிப்பதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

மேற்குறிப்பிட்ட முயற்சிகளின் காரணமாக உள்நாட்டு ரீதியாகவும் பன்னாட்டு ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பன்னாட்டு நியமங்களைப் பூர்த்திசெய்துள்ள தேசிய அட்டைத் திட்டத்தின் கீழ் கொடுப்பனவு அட்டைகள் வழங்கப்பட்டமை தொடர்பில் இலங்கை தற்பொழுது பெருமைப்பட்டுக் கொள்ளமுடியும். ஈஎம்வி - இயலுமைப்படுத்தப்பட்ட சிமார்ட் சிம் அட்டை, தற்பொழுது கொடுப்பனவு அட்டைகளுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள அனைத்து பாதுகாப்புப் பண்புகளையும் கொண்டிருக்கிறது. லங்காபே அட்டைகளின் அனைத்து உள்நாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்களும் உள்நாட்டு ரீதியாக லங்காபே தேசிய கொடுப்பனவு வலையமைப்பினூடாக வழிப்படுத்தப்பட வேண்டியுள்ள வேளையில் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்கள் ஜேசிபி இன்ரநைஷனல் ஆளி ஊடாக வழிப்படுத்தப்படுதல் வேண்டும்.

தேசிய அட்டைத் திட்டத்தின் இரண்டாவது கட்டமாக, “லங்காபே 1இல் 2” அட்டை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இது, பொதுப் போக்குவரத்து உட்பட, சில்லறைக் கொடுப்பனவுகளுக்கான தொழிற்பாடுகளுடன்கூடிய மேலதிக பெறுமதி சேமிக்கப்பட்ட சிப்பினை அடிப்படையாகக் கொண்ட கிட்டிய துறைத் தொடர்பூட்டல் அட்டையொன்றாக இருக்கும். மேலும், இது கொடுகடன் அட்டை ஒன்றினை வழங்குமெனவும் அதேபோன்று தேசிய அட்டைத் திட்ட முன்னெடுப்புக்களின் கீழ் இ - வர்த்தக் கொடுக்கல்வாங்கல்களுக்கு ஆதரவளிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிகழ்வின் போது தனது கருத்துக்களை வெளியிட்ட இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி அவர்கள் “பன்னாட்டு நியமங்களைப் பூர்த்திசெய்கின்ற விதத்தில் இலங்கை அதன் தேசிய அட்டைத் திட்டத்தினை ஆரம்பித்திருக்கின்ற இந்நிகழ்வானது உண்மையில் முக்கியமானதொரு சம்பவமாகும், இது, நிதியியல் உள்ளடக்கத்தினை இயலுமைப்படுத்துகின்ற குறைந்த செலவினை கொண்டிருப்பதன் காரணமாக இலங்கையின் வாடிக்கையாளர்களுக்கு அளப்பரிய நன்மைகளைக் கொண்டுவரும்” எனக் குறிப்பிடுகின்றார். ஆளுநர், லங்காபே தேசிய அட்டைத் திட்ட அட்டையினை வழங்குகின்ற முதலாவது வங்கியாக விளங்குகின்ற எம்சிபி வங்கிக்கு தனது வாழ்த்துக்களையும் விற்பனைகளின் பொதுவான மையத்தில் இணைந்துகொண்டமைக்காகவும் தேசிய அட்டைத் திட்டத்தின் விற்பனை மையக் கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளித்தமைக்காக கார்கில்ஸ் வங்கி, இலங்கை வர்த்தக வங்கி மற்றும் செலான் வங்கி என்பவற்றுக்கு தனது நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டார். மேலும், அவர் தேசிய அட்டைத் திட்டம் மற்றும் பொதுவான விற்பனை மையம் என்பனவற்றை நடைமுறைப்படுத்தியமைக்காகவும் தேசிய கொடுப்பனவு உட்கட்டமைப்பினை விரிவுபடுத்துவதில் இன்றியமையாத வகிபாகத்தினை ஆற்றியமைக்காகவும் லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட்டினைப் பாராட்டினார்.

லங்கா கிளியரின் தலைவர் திரு. அனில் அமரசூரிய இம்முன்னெடுப்புக்களின் முக்கியத்துவத்தினை பாராட்டிய வேளையில் அவர் “இலங்கையில் கொடுப்பனவு அட்டை தொழில் துறையில் இதுவரையான காலப்பகுதியில் பன்னாட்டு அட்டைத் தொழிற்பாட்டாளர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்ததன் விளைவாக வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறை அட்டைத் தொழிற்பாடுகளுக்கு வசதியளிப்பதற்கு இத்தொழிற்பாட்டாளர்களின் மீதே பெருமளவிற்கு தங்கியிருக்கவேண்டியிருந்தது. தேசிய அட்டைத் திட்டமானது அனைத்து உள்நாட்டுக் கொடுக்கல்வாங்கல்களையும் உள்நாட்டு ரீதியாக வங்கிகளுக்கு மிகக்குறைந்த செலவினைக்கொண்ட அமைப்பில் வழங்கியதன் மூலம் இச்சுமையினை அகற்றிவிடும். பேரண்ட கோணத்திலிருந்து நோக்குகையில் உள்நாட்டு வங்கிகளுக்கிடையேயான கொடுக்கல்வாங்கல்கள் லங்காபே வலையமைப்பினூடாக வழிப்படுத்தப்படவுள்ளமையின் காரணமாக தேசிய அட்டைத் திட்டமானது நாட்டிற்கான பெறுமதிமிக்க வெளிநாட்டுச் செலாவணியினை சேமிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தேசிய முன்னெடுப்பில் இன்றியமையாதவொரு பாகமாக நாம் இருப்பது எமக்கு கௌரவத்தை அளிப்பதுடன் இச்செயற்றிட்டத்தினை நிறைவேற்றுவதற்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஆதரவிற்கும் தொடர்ச்சியான வழிகாட்டல்களுக்கும் நாம் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்” எனக் குறிப்பிடுகிறார்.

